

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று முன்தினம் (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



தி.மு.க. சட்டத்துறையின் சார்பில் மேற்கு மண்டலம் 2 கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் 2026 ஆண்டு நடைபெறுகின்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு விருதுநகர் தெற்கு மற்றும் வடக்கு மாவட்டத்திற்கு உள்ளடங்கிய கழக வழக்கறிஞர்கள் மற்றும் DLC, CLC, FLC, TLC, ULC Div LC ஆகியோர்களுக்கு பயிற்சி பாசறைக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், தங்கபாண்டியன் கழக சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், சு. ராதாகிருஷ்ணன், துணை செயலாளர் ராஜா முகமது, வழக்கறிஞர்கள் ஏ.கலாநிதி ,எஸ்.எஸ்.. மனோஜ் மற்றும் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாவட்ட வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முன்னதாக நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பயிற்சி வகுப்பு துவங்குவதற்கு முன்பாக அன்னாரின் மறைவிற்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.



ஆத்தூர் தொகுதி முழுவதும் சென்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக நிறைவேற்றப்படும் என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார். மணலூர் ஊராட்சி பெரும்பாறை ஆர்.ஆர்.நகர் மக்கள் தங்கள் கோரிக்கையை அமைச்சர் நிறைவேற்றியதற்கு ஏலக்காய் மாலை அணிவித்து நன்றி தெரிவித்தனர். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி உட்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

### களக்காடி எல்லப்பன் தலைமை! எம்,கிருஷ்ணமூர்த்தி - இரா,துரைராஜ் முன்னிலை! சைதை ஜாபர்கான் பேட்டையில்

# சென்னை உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு தங்க நாணயம்!

## மாவட்டச் செயலாளர் -அமைச்சர் மா,சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஜூலை 21 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது நிறைவு விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்குப் பகுதி தி.மு.க. 139 வது வட்டம், ஜாபர்கான் பேட்டை, சென்னை உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 500 க்கு 400க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஒரு கிராம் தங்க நாணயம் வழங்கும் விழா 24.7.2025வியாழக்கிழமை அன்று காலை 10 மணிக்கு ஜாபர்கான் பேட்டை பள்ளி வளாகத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு கழக தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர்கள் மண்டலக் குழுத்தலை வர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், மற்றும் சைதை மாஅன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகிக்கி ன்றனர்.

சைதை த.சம்பத் , வி.பி. ஜானகிராமன், ஆர். ரமேஷ், கவிதா கௌதமன், சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவா ணன், டி.என்.சிவமணி, த.மணி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஒரு கிராம் தங்கநாணயத்தை மாவட்டக் கழகச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கி சிறப்பிக்கிறார்.

இந் நிகழ்ச்சியில் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., துணை மேயர் மு. மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், மின்னல் கந்தப்பன், எம்.எஸ்.ஹரிபாபு, தா.மோகன்குமார், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், கோ. பாஸ்கர், அஞ்சலராமன், கு.புகழ்வேந்தன், பொன்.ஜெய்சிங், பாய்லர் ஏ.ரவி, ஜி.பாபு, ஆர்.எல். காந்தன், மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், சாந்தி சுந்தரம், அ.அயாத்பாஷா, இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ். பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், சைதை எல்.சந்திரன், து.முரளி, சி.டி.காசிநாதன், வி. சபரி, அ.சுப்பிரமணி, ஜி.ஏழுமலை, கொடி சுரேஷ், டி. கோபால கிருஷ்ணன், எஸ்.முகமது அலி, என்.ராஜேஷ், மு. காளியப்பன், நியூகாலனி, சம்பத், வி.பி.சிவக்குமார், ஜிம் க.பிரபு, க.விக்னேஷ், இரா.சத்யா, எம்.அருண், பி.டி.சி.ரவி, சி.ராஜா, சைதை ம.திலீபன், மதிவாணன், வ.ராஜா, சரவணன், சி.ஆறுமுகம், சி.மங்கையர் திலகம், எல்.மல்லிகா, கே. காஞ்சனா, என்.மணிகண்டன், க.கஜேந்திரன், சரவணன், மு.அஜீம், வி.லோகநாதன், ஆர்.அருண், வ. இளங்கோ, வினோத்குமார், கே.தினேஷ், வி.வினிதா, எம்.ஜெ.கெவின், அருண், கண்ணதாசன், கே.சுரேஷ், கோகுல் குமார், வி.பிரவீன் குமார், கு.அஜித் குமார், அ.அஜய், ஜெ.கதிரவன், சி.வி.பிரவின், காரைக்குடி வி.செல்வம், தெ. கொரிய குமார், ஆர்.தண்டபாணி, எஸ்.நித்தியானந்தம், ஜி.கங்காதரன், ஆர்.சுரேஷ், கு.சுகுமாறன், ஏ.பழனி, வி.விஜயகுமார், வெங்கடேசன், சைதை பாஸ்கர்,ஜெ.ரவிச்சந்திரன், வினோத் துளசிங்கம், சென்ட்ரல் குமார், பி. பழனி, பு.பாஸ்கர், பி. ஆசைத்தம்பி, அ.நெடுஞ்செழியன், சிட்டி சலுன் ரவி, சந்திரன், எஸ்.குணசேகர்,இ.விமல், கொடி எல். மணி, மா.ராஜேஷ், ப. ராகுல், டி.சுதாகர் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கி ன்றனர். விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர் பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார்.

400க்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் என்.ஹரினி, எஸ்.ரக்ஷிதா, எம்.ரீனா, எஸ்.ரிதீஷ் குமார், ஆர். கீர்த்தனா, ஆர்.நிவேதா, பி.தமிழ்ச்செல்வன்,இ. நவீனா ஆகியோர் ஒரு கிராம் தங்க நாணயம் பெறுகின்றனர்.

அதே போன்று 500க்கு மேல் 400 க்குள் மதிப்பெண் பெற்ற ஏ.ரஞ்சினி, எஸ்.பிரேம்குமார்,கே. பவானி, வி.சந்தியா, எஸ். அகஸ்டின், ஆர். லாவண்யா, கே.ஷாயின்பேகம், வி.தியாஸ்ரீ,எம். திவ்யதர்ஷினி, எஸ். விஷ்ணு, எஸ்.தேவி, ஆர். யாழினி, சி.சௌந்தர்யா ஆகிய மாணவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பொதுக் குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

# திரையுலகில் சிறந்து விளங்கியவர் மு.க.முத்து!

## மறைவுக்கு – ஐ.ஜெ.கே.தலைவர் டாக்டர் ரவி பச்சமுத்து இரங்கல்!

சென்னை, ஜூலை 21-

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகனும், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சகோதரருமான மு.க.முத்து அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று மறைந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

தமிழ்த் திரைப்பட நடிகரும் மேடைப் பாடகருமான மு.க.முத்து அவர்கள் திரைத்துறையில் சில காலங்கள் இருந்தாலும் மக்கள் மனதை வெகுவாகக் கவர்ந்தவர். திரைத்துறையில் 1970 ஆம் ஆண்டு நுழைந்து, பிள்ளையோ பிள்ளை, அணையா விளக்கு உள்ளிட்ட பல படங்களில் நடித்தும் தனது சொந்தக் குரலில் பல்வேறு பாடல்களை பாடியும் புகழ் பெற்றவர்.

மு.க.முத்து அவர்களின் மறைவால், அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் - திரைத்துறை நண்பர்களுக்கும் என் சார்பிலும், இந்திய ஜனநாயகக் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆன்மா இறைவனடி நிழலில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றேன் என்று இந்திய ஜனநாயகக் கட்சித் தலைவர் டாக்டர் ரவிபச்சமுத்து தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### ஆடி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு மேல்மலையனூர்

# அங்காளம்மன் திருக்கோயிலில் கூழ்வார்த்தல் நிகழ்ச்சி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி ஜூலை 21.

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி தமிழ்நாடு சட்ட மன்ற பேரவையில் இந்து சமய அறநிலைத்துறையின் 2025 2026 அறிவிப்பு எண்25 படி மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயில் ஆடி மாதம் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு கூழ் வார்த்தல் நிகழ்ச்சி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவிலில் ஆடி மாதம் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு கூழ் வார்த்தல் நிகழ்ச்சி நேற்று காலையில் நடைபெற்றது.

இந்து சமய அறநிலைத்துறை உதவி ஆணையர் மேல்மலையனூர் சக்திவேல் தலைமையில் நடைமுறை அறங்காவலர் ஏழுமலை,அறங்காவலர்கள் சுரேஷ், மதியழகன்,பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டுகூழ் வார்த்தல் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் வீடூர ரவி,ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், ஒன்றிய கவுன்சிலர் யசோதரை சந்திரகுப்தன், கோவில் ஆய்வாளர் சங்கீதா, மேலாளர் மணி உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசித்து வரும்

# இலங்கைத் தமிழர்களின் திருமணங்களைப் பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம்!

## பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 20-

பத்திரப் பதிவு துறைத் தலைவர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :

இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசித்து வரும் இலங்கை தமிழர்களின் திருமணங்களை பதிவு செய்வதற்காக கடந்த 2018 ஆம் ஆண்டு ஒரு சிறப்பு முகாம் பத்திரப்பதிவுத்துறையால் நடத்தப்பட்டது. 10.12.2018 முதல் திருமண பதிவுகள் இணையவழி வாயிலாக சம்பந்தப்பட்ட திருமண தரப்பினரால் விண்ணப்பித்து திருமண பதிவுகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் திருமணங்களை பதிவு செய்வதற்காக சிறப்பு முகாம்கள் அமைத்து தருமாறு தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பத்திரப்பதிவுத்துறைக்கு கோரிக்கை கடிதம் அனுப்பி உள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு மறுவாழ்வு முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களின் திருமணங்களை பதிவு செய்வதற்காக சிறப்பு முகாம்கள் நடத்திட பத்திரப்பதிவுத்துறை உரிய ஏற்பாடுகள் செய்துள்ளது. சனிக்கிழமை வேலை நாட்களாக உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களில் 26.07.2025 சனிக்கிழமை அன்றும் சனிக்கிழமை வேலை நாட்களாக இல்லாத இதர சார்பதிவாளர் அலுவலகங்களில் 25.07.2025 வெள்ளிக்கிழமை அன்றும் மேற்கண்ட திருமணங்களை பதிவு செய்வதற்காக சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கு பதிவுத்துறை தலைவரால் தொடர்புடைய பதிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை திருமண பதிவிற்காக காத்திருக்கும் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கூத்தாநல்லூர் நகராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் கலந்துகொண்டு துவக்கிவைத்தார். மனுக்களில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் மோகனசுந்தரம், நகரச் செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, நகர்மன்றத் தலைவர் பாத்திமா பஷீரா உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.



வேலூர் மாநகரம் தோட்டப் பாளையம் எட்டியம்மன் பள்ளியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் மின் இணைப்பு பெயர் மாற்றம் கோரிய மனுக்களின் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு 2 பயனாளிகளுக்கு பெயர் மாற்ற ஆணையை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் 2வது மண்டலகுழு தலைவர் வீனஸ் ஆர். நரேந்திரன் ஆணையாளர் லட்சுமணன் மாமன்ற உறுப்பினர்கள் எஸ். முருகன் தர்வாம்பாள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.